# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - செய்திமடல்
# Jaffna National College of Education - News letter
# குருதீபம்
# Gurutheepam

மே - 2019

இதழ் - 01



**போசகர்:**

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்

பீடாதிபதி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

***ஆலோசகர்கள்:***

திரு.எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை
கலாநிதி பா.தனபாலன்
திருமதி.செ.சிவபாதம்

உப பீடாதிபதிகள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

***ஆசிரியர் குழு:***

திரு.சி.முகுந்தன்
திரு.ம.நிரேஸ்குமார்
திருமதி.ஜெ.உதயகுமார்
திருமதி.ஞா.கணேசநாதன்
திருமதி.சு.விக்னமோகன்
திரு.ப.இராஜேஸ்வரன்
திரு. பொ.விஜயகுமாரன்
கலாநிதி எஸ்.பத்மராசா
திரு.அ.லோகநாதன்



***வெளியீடு:***

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்

021 223 0036
Jaffnancoe@hotmail.com
www.jncoe.net


**நோக்கக்கூற்று**

பிள்ளைகளின் உள்ளார்ந்த திறன்களை உயர்ந்தபட்சம் விருத்தி செய்து, அவர்களை நற்பிரசைகளாக்கக் கூடிய, தேர்ச்சியும் அர்ப்பணிப்பும் கொண்ட ஆசிரியர் குழாத்தை அமுல்படுத்தப்படும் கலைத்திட்டத்தினூடாக உருவாக்கி நாட்டிற்கு வழங்கல்.

**பணிக்கூற்று**

வினைத்திறனுடன் கூடிய தொழில்வாண்மையுடையோர்களாகவும், தேசத்தின கட்டுமானத்தில் உண்மையான பங்காளராகவும், காலத்தின் தேவைக்கேற்ப கல்வியின் தேசிய இலக்குகளை உணர்ந்தோராகவும், உலக, சமூக முன்னேற்றத்திற்கு பொறுப்பு வாய்ந்தவர்களாகவும் உள்ள பொருத்தமான தேர்ச்சியுடைய ஆசிரியர்களை பாடசாலை முறைமைக்கு வழங்கல்.

## ஆசிச்செய்தி



மாறிவரும் சமூக மாற்றத்தில் அறிவுச் சமூகம் மற்றும் அவற்றிற்கு அடிப்படையான மனிதவள உருவாக்கத்தில் கல்வி நிறுவனங்கள் குறிப்பாக ஆசிரியர்களை பயிற்றுவிக்கின்ற தேசியகல்வியியற் கல்லூரிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஒரு நிறுவனத்தின் செயலாற்றுகைகளை, தரச் சுட்டிகளை, ஒப்பு நோக்கிய இலக்குகளையும் (Benchmark) காலத்தின் பதிவுகளாக ஆவணப்படுத்துவதற்கும், அறிவிப்பதற்கும், நிறுவனம் - சமூக இடைத்தொடர்பை வலுப்படுத்துவதற்கும், கல்விச் சமூகத்தின் மத்தியில் பொதுசன அபிப்பிராயம் (Public opinion) மற்றும் பிரபல்யம் (Publicity) போன்றவற்றை கட்டியெழுப்புவதற்கும், சிறந்த மாதிரிகளை வெளிப்படுத்தவும், பல்வேறு தொடர்பாடல் வடிவங்கள் மற்றும் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அவ்வகையில் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் செயலாற்றுகைகளையும், தரச்சுட்டிகளையும் உள்ளடக்கியும், புதிய தகவலை சேகரித்தல், புதிய தகவலை ஆக்குதல், புதிய தகவலை இற்றைப்படுத்துதல் அவற்றைப் பரப்புதல் போன்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அச்சு ஊடக தொடர்பாடல் வடிவமான ‘குருதீபம்’ செய்தி மடல் வெளியீடு செய்யப்படுகின்றது.

யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி சார்பாக, கல்லூரி தினத்தில் (மே 2), முதல் தடவையாக செய்திமடல் வெளியீடு செய்யப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இவ் ஆக்க முயற்சியில் ஈடுபட்ட ஆசிரிய கல்வியியலாளர் குழுவினருக்கு பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இம் முயற்சியானது தொடர்ந்து மேம்பட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்**




## கல்லூரி கீதம்

இராகம் : பிருந்தாவன சாரங்கா
தாளம் : ஆதி

**பல்லவி**

வாழ்க யாழ் கல்வியியற் கல்லூரி – என்றும்
சூழ்க நல் ஆசிரியர் கலைக் கல்விக் கல்லூரி

**அனுபல்லவி**

ஆழ் கடலெனக் கல்வி அறிவு தரும் அன்னை
ஏழிசை பாடியே என்றும் துதிப்போம் - நாமே

**சரணம்**

தெய்வ பக்தி தேச பக்தி தெய்வீக குரு பக்தி
உய்யும் வழி காட்டிடிவே உணர்ந்து வணங்கிடுவோம்
செய்வதெல்லாம் செம்மையுறச் செய்திடவே கற்றிடுவோம்
வையகத்தில் ஆசிரிய வளர் கல்வி நல்கும் அன்னை
(வாழ்க)

உளவியல் கல்வியியல் உயர்ந்த கற்பித்தல் முறை
வளநிறை விஞ்ஞானம் வரை சித்திரம் கணிதம்
அளவிலா நயம் நிறை ஆடலும் பாடலும்
விளையாடல் ஆரம்ப விதிக்கல்வி தரும் அன்னை
(வாழ்க)

பாங்கான கணனியும் பாலிக்கும் நூலகவியல்
ஆங்கிலம் தொழிற்கல்வி அழகுறத் தரும் அன்னை
நீங்காத பாசத்துடன் நிறை கல்வி நல்கும் மாதா
நாம் காணும் கலைத்தேவி நானிலத்தில் பல்லாண்டு
(வாழ்க)

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்
பழுத்த செந்தமிழின் பழச்சுவை ஊட்டுவான்
செழித்திடும் ஆசிரியச் சீர்கல்வி தருவான்
வாழ்த்தியே வாழ்த்துவோம் வளமார் கல்லூரி அன்னை
(வாழ்க)

தாமரை நாயகன் உதித்தே எழுந்தான்
தண்கலை கல்வியில் தாமரை விரித்தான்
நாமகள் வந்துறையும் கோவிலும் சமைத்தான்
நலம்பெறக் கல்வியியற் கல்லூரி வளர்த்தான்
(வாழ்க)

**ஆக்கம் :**
கலாரத்னா, கலாபூஷணம், முத்தமிழ் கலாநிதி,
மஹாவித்துவான் பிரம்ஸ்ரீ
மா.த.**ந.வீரமணி ஐயர்** எம்.ஏ, சமாதான நீதிவான்.

# நிகழ்ச்சிகளின் பதிவுகள்



பொங்கல் விழா 2019



16வது பட்டநிறைவு விழா 2019




ICT Day 2019



அழகெழல் 2019



அழகெழல் 2019



மகா சிவராத்திரி விழா 2019





பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்களின் மணிவிழா



விளையாட்டு விழா 2019



கல்லூரியின் புதிய பீடாதிபதி
உயர்திரு சுப்பிரமணியம் பரமானந்தம்
அவர்களுக்கான வரவேற்பு



சமூக ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி
2019



Interactive white board training
for lectures 2019

## ஆசிரியர் கல்வியில் கல்வித் தொழினுட்பம்



'தரமான ஆசிரியர் கல்வியினூடாக தரமான ஆசிரியர்கள்' என்பதற்கமைய தற்போது ஆசிரியர் கல்வியானது புதிய மாற்றங்களை உள்வாங்கி, உயர்ந்தளவிலான தரத்தில் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் உலகமெங்கும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் ஆசிரியர் கல்வியில் கல்வித் தொழினுட்பத்திற்கான முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது.

கல்வித் தொழினுட்பத்தைப் பிரயோகிக்கத் தெரியாத ஆசிரியர்கள் வகுப்பறைக்குள் நுழைய முடியாத நிலை வெகு தூரத்தில் இல்லை. தகவல் தொடர்பாடல் தொழினுட்ப சாதனங்களின் பயன்பாட்டை உயர்ந்தளவில் இற்றைப்படுத்தியுள்ள மாணவர் சமுதாயத்திற்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் தம்மையும் இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை தற்போது அதிகரித்துள்ளது.

அந்த வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வித் தொழினுட்பம் தொடர்பான அறிவையும் ஆற்றல்களையும் ஆசிரிய மாணவர்களுக்கு வழங்குவதற்கான செயற்பாடுகள் துரித கதியில் மேற்கொள்ளப்படுகின்றன. கணினி ஆய்வு கூடங்களின் அபிவிருத்தி, இணைய இணைப்புக்கள், கணினி வலைப்பின்னல்கள், திறன் விருத்திப் பலகைகளைக் கொண்ட நிலையான வகுப்பறைகள், தேவையான இடங்களில் பல்லூடக எறியிகள் என அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியானது தரமான ஆசிரியர்களை உருவாக்குவதற்கான அடுத்த கட்டம் நோக்கி நகர்ந்துள்ளமையை இது குறித்து நிற்பதாகவே நாம் காண்கின்றோம்.

**திரு.ம.நிரேஸ்குமார் , திரு.வே.நந்தகுமார் - விரிவுரையாளர்கள்**

## பிரதிபலிப்பு குறிப்பு - கோட்பாடுசார் இலக்கிய மீளாய்வு

- வாண்மைத்துவ விருத்தி சார்ந்த தொழில்துறையில் பயன்படுத்தப்படுகின்ற பதிவேடாக பிரதிபலிப்பு குறிப்பு காணப்படுகின்றது. இதனை பிரதிபலிப்பு ஏடு எனவும் அழைப்பர். வகுப்பறை கற்பித்தலை மையமாகக் கொண்ட நாட்குறிப்பேடாக பிரதிபலிப்பு குறிப்பு பேணப்பட வேண்டும். (தேசிய கல்வியியற் கல்லூரிகளின் கட்டுறுப் பயிலுவுக்கான வழிகாட்டல் குறிப்புக்கள்,2000)
- வகுப்பறை கற்பித்தலின் போது பிரச்சினையுடன் தொடர்புடைய காரணிகளை இனங்காண்பதற்கும் அவற்றை தீர்ப்பதற்கான திட்டங்களை தயாரிக்கவும் அந்தச் செயன்முறையை முன்னெடுக்கவும் பிரதிபலிப்பு எழுதுதல் அடிப்படையானது. (கர்ட்லெவின்,1947)
- பிரதிபலிப்பு என்பது மனித சிந்தனை செயன்முறையின் ஒரு தன்மையாகும். எங்களுக்கு கிடைக்கும் அனுபவங்கள், புலக்காட்சி பெறும் தகவல்கள் தொடர்பாக உள்ளம் செயற்படும் விதம் தொடர்பாக நீங்கள் அறிந்த நிலையில் செய்யும் விமர்சனரீதியான நுண்ணாய்வு. (Meziron, 1990, Schon,1997 & Brookfield,1987)
- பிரதிபலிப்பு கையேடு என்பது கற்றல் பதிவேடு, ஆழ்சிந்தனைப் பதிவேடு எனவும் அழைப்பர். தனியாள் ஒருவரின் வாழ்நாள் கற்றலுக்கு அவசியமான திறன்களை விருத்தி செய்வதற்கும், கற்கின்ற வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் உதவுவதே பிரதிபலிப்பு கையேட்டின் பிரதான நோக்கம்.(பாஸ்கரன்,2010)
- எமது அனுபவங்கள் ஊடாக கற்றுக் கொள்வதற்கும், எங்கே நாங்கள் உள்ளோம், எங்கே அடுத்துச் செல்ல வேண்டும் என்பதை உணர்த்துவது. (Kenneth Wolf, 2001)
- ஒரு குறிப்பிட்ட விடயம் தொடர்பிலான கடந்த கால நிகழ்வு மற்றும் அனுபவம் தொடர்பான ஆழமானதும் கவனமானதுமான சிந்தனை செயன்முறை (Oxford English Dictionary,2012) பிரதிபலிப்பு எழுதுதல் சுய அபிவிருத்திக்கான ஊக்கமளிக்கும் வழி அத்துடன் அனுபவங்களை ஆழமாக நோக்குவதனூடாக கற்பதற்கும், எதிர்காலத்தில் முன்நோக்கி நகர்வதற்கும் உதவும். (Guide to Reflective writing,2013)
- பிரதிபலிப்பு என்பது ஒரு அனுபவத்தை மீண்டும் ஞாபகப்படுத்தி ஆழமாகச் சிந்தித்து பார்ப்பதன் மூலம் பெறப்படும் உணர்வாகும். அது எமது ஆத்ம விளக்கத்திற்கும், சுயாதீன வளர்ச்சிக்கும், விருத்திக்கும், அடுத்த தடவைகளில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளை வெற்றிகரமாக்க உதவும். (மாகாண ஆசிரிய பயிற்சி நிகழ்ச்சித் திட்ட வழிகாட்டல்,2013)
- கற்பித்தல் தொடர்பான தெளிவான சுய விளக்கத்தை அறியவும், குறைநிறைகளை இனங்காணவும், வினைத்திறனான செயன்முறைகளை இனங்காணவும், சுயமாகவே தொழிலர் சார் விருத்திக்கான வழிகளை இனங்கண்டு கொள்ளவும் எழுதப்படும் குறிப்பு. (இலங்கை திறந்த பல்கலைக்கழகம், 2017)

**திரு. ப. இராஜேஸ்வரன் - விரிவுரையாளர்**

## உலகின் சிறந்த ஆசிரியர் - 2019

2019 ஆம் ஆண்டிற்கான உலகின் தலைசிறந்த ஆசிரியருக்கான பரிசினை கென்யா நாட்டைச் சேர்ந்த 36 வயதுடைய Peter Tabichi என்ற ஆசிரியர் பெற்றுக் கொண்டார். இவர் கணிதம் மற்றும் பௌதீகவியல்




பாடங்களை கற்பிப்பதோடு தனது வருமானத்தில் 80% இனை வாழ்க்கைத்தரம் குன்றிய மாணவர்களின் கல்விச் செலவுக்குக் கொடுப்பதோடு கட்டணமின்றி மாணவர்களின் வீடுகளுக்கு சென்று பிரத்தியேக வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றார்.

"என்னுடைய மாணவர்கள் சாதிக்கிறார்கள், அவர்களால் எதையும் செய்ய முடியும் என்பதே நான் இந்தப் பரிசைப் பெறுவதன் அர்த்தமாகும்" என்பது ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பரிசினை டுபாயில் இவர் பெறும் போது கூறிய வார்த்தையாகும்.

### கல்லூரித் தாய்

கல்லாக வந்தோம்!
சிலையாக செதுக்கி,
கலை அன்னை நீ
எம்மை உருவாக்கினாய்
சிந்தித்து சொல்லாக்கி
செயலாற்ற வைத்தாய்
சிறப்பாக ஆசிரியத்துள்
எமை இணைத்தாய்!
உன் மடி மீது தவழ்ந்த
சில நாட்கள் தானே
எம் வாழ்வின் மறவாத
பொன்னாட்கள்!

**செல்விகள் G.மதிவதனி, P.கஜீலா, ஆசிரிய மாணவர்கள்**

### காலை வணக்கம்

காலைப் பொழுதின் மகிழ்ச்சி அன்றைய நாளின் மகிழ்ச்சி.
மனிதர் மட்டுமன்றி ஏனைய ஜீவராசிகளின் உணர்வுகளிலும்
உள் நின்று ஒளிரும் நிகழ்ச்சி.
சூரியன் எழுச்சி, பூக்களின் மலர்ச்சி, நறுமண நுகர்ச்சி, பறவைகள் மகிழ்ச்சி, மனிதரின் புகழ்ச்சி அதுவே காலை வணக்கம்.
மனிதம் மகிழ மன மகிழ்வுடனே காலை வணக்கம் சொல்வோம்.
அன்றைய பொழுதை வெற்றிக்குரிய இனிய பொழுதாய் அமைப்போம்.

**திரு.க.இ.கமலநாதன்,விரிவுரையாளர்.**



## Farewell

Our College gave a farewell to Miss.Joanna Arpie, a lecturer of English , served from May 2018 to April 2019, has to return her home country as the US Embassy instructs according to the prevailing unavoidable circumstances in this country. She is really an ideal teacher during her career in this College.
The President of the Jaffna National College of Education Mr.Subramaniam Paramanantham and lecturers appreciate her service and handed over a souvenir after a lunch in US Hotel.

### Let's Boost Ourselves by Keeping Diaries

It is very sad to learn that only five percent of our prospective teachers use diaries to plan and reflect on their daily activities. Actually, diary can be considered as a handier tool which can boost our writing skills in the following ways:

- By writing our daily plans and reflections, we can organise our activities and identify the apparent lapses.
- We can write down the quotations and excerpts or summaries of whatever we read daily in the diary and it functions as a learning log.
- Diaries can act as wonderful companions of us to get rid of our boredom and even unwanted stress.
- Diaries can act as notebooks for jotting down new vocabularies whenever we come across.
- Thus, diaries help us to improve our writing ability and help us keep relaxed by re-reading our past thoughts and ideas.

**"I can shake off everything as I write, my sorrows disappear, my courage is reborn"-** Anne Frank

**T.Mohan, Lecturer**

### திருக்குறளில் பௌதிகவியல் கருத்துகள்

A Keen sense of mechanics is revealed in the reference to the important role of the axle-pin in a rolling temple car (667,1032), the axle in a cart (475) and the pillars in a building (615, 983)

சமன்செய்து சீர்தூக்குங்கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

"The two arms of a balance used for weighing must be equal in length; Likewise, a just person must not favor one of the contending parties but must remain neutral

பேராசிரியர்.க.ப.அறவாணன்,பேராசிரியர்.வி.மி.ஞானப்பிரகாசம்
'தமிழில் அறிவியல் கருத்துகள்',(1954)

திரு.பொ.விஜயகுமாரன் - **விரிவுரையாளார்**

### மாணவர்களின் உள விருத்தியில் அழகியற் கலைகள்

சமநிலை ஆளுமை விருத்தியில் அழகியற் கலைகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அழகியற் பாடங்கள் மற்றும் செயலாற்றுகைகள் மனிதப் பண்புகளுடனான மனப்பாங்கு விருத்திக்கு உதவி செய்கின்றன. அழகியல் உணர்வு மனிதப் பண்பை வளர்க்கின்றது என தத்துவஞானி பிளேற்றோ மற்றும் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் ஆகியோரது கருத்துக்கள் புலப்படுத்துகின்றன. அழகியற் கலைகள் மனித வாழ்வை வளப்படுத்துவதாக ஆன்மீகமும் கூறி நிற்கின்றது.

அழகியல் நிகழ்ச்சிகள் புலன்களைக் கவருவதால் மனித மனத்தினுள் மானசீகமான திருப்தியையும், இன்பத்தையும் ஏற்படுத்துகின்றன. மனிதர்கள் நல்ல மனிதத்துவமுள்ளவர்களாக மிளிர்வதற்கு அழகியல் உணர்வு உதவுவதுடன் உள விருத்தியையும் ஏற்படுத்துகின்றது.

**திருமதி ஞா.கணேசநாதன், விரிவுரையாளர்.**

### An Ideal Teacher

"A good teacher can inspire hope, ignite the imagination, and instill a love of learning" said Brad Henry

An ideal teacher is a divine blessing for the society. He/she devotes heart and soul to teaching and career-building of his/her pupils. He/she commands respects from our heart. He/she possesses all good and noble qualities of a human being. To the students, he/she is a friend, philosopher and guide at a stretch. He holds aloft the light of knowledge for his/her students. He possesses sound qualification. His/her comments are always constructive in nature. Such a teacher shapes the entire life of the students. If everyone in this world gets an ideal teacher, he/she will seldom be a failure in life.
An ideal teacher is first a problem solver. Teachers are largely responsible to solve the problems of their pupils, without expecting anything in return. Every student is different from the other and will react differently to situations. They need individual attention. An ideal teacher knows where the students lack and what their requirements are. He/she never fails to comprehend the needs of students and tries his/her level best to fulfill them.
An ideal teacher leaves a life-long impression on his/her students by dint of his good character and manners and influences their mind in a positive way. He/she is a much valued asset, without whom one can't imagine a life. In fact, perfect teachers are as important as our parents. They are the ones, whom the students can idolize and look up to. An ideal teacher shows students the right path under all circumstances and never shies away from his/her duties.
An ideal teacher never lets the limitations of his/her students restrict their vision. He/she constantly motivates them to reach ahead and broaden their horizon. He helps them realize their talents as well as the need to pursue them with diligence.
An ideal teacher is an effective leader who inspires and leads his students to excel in their school work.
An ideal teacher is an asset for a nation. He builds the future of the nation. Every teacher should make him/her ideal in the larger benefit of the society.

**S.Muguntthan , Lecturer.**

### திருநீறு அணிந்தால்...

உடல் நாற்றம் போகும்
நோய்க் கிருமிகள் சாகும்
தீட்டுக்கள் கழியும்
உடம்பு சுத்தமாகும்
வியாதிகள் ஒழியும்
பில்லி சூனியம் போகும்
முகத்திற்கு அழகு தரும்
ஞாபக சக்தி வளரும்
புத்திக் கூர்மையாகும்
ஞானம் உண்டாகும்
பாவங்கள் தீர்க்கும்
பரமனடி சேர்க்கும்

**திரு சி.சிவசங்கர், விரிவுரையாளர்.**